பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
02 06 2025 **MONDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி-செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- புதுதில்லி வந்துள்ள பராகுவே அதிபர் திரு. **Santiago Pena Palacios**–உடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.
- வேளாண் துறையை மேம்படுத்தி, விவசாயிகளின் நலனை பாதுகாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.
- தமிழக அரசின் குறைகளை மறைப்பதற்காகவே திமுக பொதுக்குழுவில் மத்திய அரசைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.
- அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில்- குற்றவாளி ஞானசேகரனுக்கு ஆயுள் தண்டனை விதித்து சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.
- கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள வடகிழக்கு மாநிலங்களில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**>>>>>><<<<<**

பராகுவே அதிபர் திரு. **Santiago Pena Palacios** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று காலை புதுதில்லி வந்தடைந்தார்.

பாலம் விமான நிலையத்தில் அவரை மத்திய இணையமைச்சர் திரு. ஹர்ஷ் மல்ஹோத்ரா வரவேற்றார்.

அவருக்கு முப்படை அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

புதுதில்லியில் அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் இன்று இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

நாளை மறுநாள் மும்பை செல்லும் பராகுவே அதிபர், அங்கு தொழில்துறையினருடன் கலந்துரையாடவுள்ளார்.

>>>>>><<<<<

வேளாண் துறையை மேம்படுத்தி, விவசாயிகளின் நலனை பாதுகாப்பதன் மூலம், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலம், பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடுமுழுவதும் 16 ஆயிரம் வேளாண் விஞ்ஞானிகள், வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டிருப்பதாக கூறினார்.

இவர்கள் விவசாயிகளை நேரடியாக தொடர்பு கொண்டு, உற்பத்தியை அதிகரித்தல், இடுபொருள் செலவை குறைத்தல், விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்தல், பாதிக்கப்படும் பயிர்களுக்கு இழப்பீடு வழங்குவது உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விளக்கி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், மாற்றுப் பயிர் சாகுபடி, இயற்கை விவசாயம் போன்றவற்றை அரசு ஊக்குவித்து வருவதுடன், பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு இயக்கம் குறித்தும் விவசாயிகளிடம் எடுத்துக் கூறி வருவதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.

>>>>>><<<<<

இத்தாலியின் தேசிய தினத்தை ஒட்டி, அந்நாட்டு மக்களுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இத்தாலி வெளியுறவு அமைச்சர் திரு. **Antonio Tajani-**மற்றும் அந்நாட்டு அரசுக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியா – இத்தாலி இடையேயான உறவு நீடித்த ஒத்துழைப்பு அடிப்படையில் அமைந்தது என்றும் திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

தமிழக அரசின் செயல்பாடுகளால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை மறைப்பதற்காகவே திமுக பொதுக்குழுவில் மத்திய அரசைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டதால், ஆளுங்கட்சியினர் விசாரணை அமைப்புகளை கண்டு அச்சமடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சாதிவாரி கணக்கெடுப்பு பற்றி பேச திமுகவிற்கு தகுதியில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

நகைக்கடனுக்கான ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாடுகளை நீக்குவது குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் நடவடிக்கை எடுத்த பிறகும், அதுதொடர்பாக தீர்மானம் போட்டிருப்பதை அமைச்சர் வன்மையாக கண்டித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தலில், அஇஅதிமுக – பிஜேபி கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு. எல். முருகன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<**

ஐஐடி, என்ஐடி உள்ளிட்ட மத்திய அரசின் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கைக்கான **JEE Advanced** தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

இத்தேர்வுக்கான விடைத்தாள் குறிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

மாணவர்கள் தங்களது பதிவு எண், பிறந்த தேதி மற்றும் செல்ஃபோன் எண்ணை பயன்படுத்தி, தேர்வு முடிவுகளை **jeeadv.ac.in** என்ற இணையதளத்தில் காணலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<**

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து உலக நாடுகளுக்கு எடுத்துரைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவினர் பல்வேறு நாடுகளுக்கும் சென்று இந்தியாவின் நிலைப்பாடு குறித்து விளக்கம் அளித்து வருகின்றனர்.

பிஜேபி உறுப்பினர் திரு. ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழுவினர், லண்டனில் கன்சர்வேட்டிவ் கட்சியின் வெளியுறவு விவகாரங்களுக்கு பொறுப்பு வகிக்கும் திருமதி. ப்ரீத்தி பட்டேல் உள்ளிட்டோரை சந்தித்து, இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்கிக் கூறினர்.

சிவசேனா உறுப்பினர் திரு. ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான குழுவினர், லைபீரியாவின் மன்ரோவியாவில், அந்நாட்டு தலைவர்களை சந்தித்து தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்தனர்.

அங்கு நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய திரு. ஸ்ரீகாந்த் ஷிண்டே, தீவிரவாததிற்கு எதிராக நாடாளுமன்ற தூதுக்குழு மூலம் இந்தியா உலகளாவிய பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

ஐக்கிய ஜனதா தள் கட்சியைச் சேர்ந்த திரு. சஞ்சய் ஜா தலைமையிலான குழுவினர், கோலாலம்பூரில் மலேசிய - இந்திய பாரம்பரிய அமைப்பின் நிர்வாகிகள் மற்றும் அந்நாட்டு ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்.

திமுக உறுப்பினர் திருமதி. கனிமொழி தலைமையிலான குழுவினர் ஸ்பெயின் நாட்டின் மேட்ரிட் சென்றுள்ளனர்.

அங்கு செய்தியாளர்களிடம் பேசிய திருமதி. கனிமொழி, மத்திய அரசு மேற்கொண்ட இந்த நடவடிக்கை மூலம், நட்பு நாடுகளிடம் தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்கியதுடன், மாற்றுக் கருத்து கொண்டிருந்த நாடுகளும் இந்தியாவை ஆதரிக்க முன்வந்திருப்பதாக தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் திரு. சசிதரூர் தலைமையிலான குழுவினர் பிரேஸின் அந்நாட்டு அமைச்சர்களை சந்திக்கவிருப்பதாக பிரேஸிலுக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று, தேசியவாத காங்கிரஸின் சரத்பவார் பிரிவைச் சேர்ந்த திருமதி. சுப்ரியா சுலே தலைமையிலான குழுவினர், எகிப்து நாட்டின் கெய்ரோவில் அந்நாட்டு தலைவர்களை சந்திக்கவுள்ளனர்.

>>>>>><<<<<

மத்திய அரசின் வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழகத்தின் தருமபுரி மாவட்டத்தில் கடந்த 29ஆம் தேதி முதல் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் உள்ள பாப்பாரப்பட்டியில் நடைபெற்ற பிரச்சார இயக்கத்தில் கோவை வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கரும்பு இனப்பெருக்க மைய விஞ்ஞானி திரு. அப்புனு பங்கேற்று கரும்பு சாகுபடியில் உள்ள நவீன தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், காளசமுத்திரம் வேளாண் அறிவியல் மையம் சார்பில், கரிஃப் சாகுபடிக்கான புதிய தொழில்நுட்பங்கள் குறித்து இப்பகுதியில் உள்ள கிராமங்களில் நடத்தப்பட்ட செயல் விளக்கம் தங்களுக்கு உதவிகரமாக உள்ளது என்று பயனாளிகள் தெரிவித்தனர்.

**>>>>>><<<<<**

அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில், குற்றவாளி ஞானசேகரனுக்கு ஆயுள் தண்டனையும், 90 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அவருக்கு 30 ஆண்டுகளுக்கு தண்டனை குறைப்பு வழங்கக்கூடாது என்றும் நீதிபதி திருமதி. ராஜலெட்சுமி தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

**>>>>>><<<<<**

கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள வடகிழக்கு மாநிலங்களில் ராணுவம் மற்றும் மத்திய பாதுகாப்புப் படையினர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

சிக்கிம் மாநிலத்தில் **Lachung** பகுதிக்குச் செல்லும் சாலை, எல்லைப்புறச் சாலைகள் நிறுவனத்தைச் சேர்ந்த பொறியாளர்களால் சீரமைக்கப்பட்டுள்ள நிலையில், அம்மாநிலத்தில் சிக்கியுள்ள சுமார் ஆயிரத்து 500 சுற்றுலாப் பயணிகளை மீட்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேபோன்று அருணாச்சலப் பிரதேசத்தின் **Dibang** பள்ளத்தாக்கில் ஆற்றின் நடுவே சிக்கிக் கொண்ட 14 பேரை மீட்கும் பணியில் விமானப்படை ஈடுபட்டுள்ளது.

அஸ்ஸாமிலும் ஜோர்ஹாத் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மணிப்பூரில் ஆப்பரேஷன் ஜல்ரஹத் என்னும் பெயரில் ராணுவம் மற்றும் அஸ்ஸாம் ரைஃபில்ஸ் படைப்பிரிவினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**>>>>>><<<<<**